UNION ASSURANCE

# Flex Life

## உங்கள் முன்னேற்றம், உங்கள் வழியில்



யூனியன் அஷ்யூரன்ஸ்
ஜோன் கீல்ஸ் நிறுவனமாகும்



வாழ்க்கையில் இரு பயணங்கள் ஒரே மாதிரியானவையாக இருக்காது.

ஆரம்பத்திலிருந்தே செல்வத்தைக் கட்டியெழுப்புவதில் சிலர் கவனம் செலுத்துகையில், சிலர் தமது பிள்ளைகளின் எதிர்காலத்தை பாதுகாத்துக் கொள்வதில் கவனம் செலுத்துவதுடன், மேலும் சிலர் தமது ஓய்வு காலத்துக்காக திட்டமிடுவதற்கு முன்னுரிமையளிப்பர். வாழ்க்கை என்பது மாற்றங்கள் நிறைந்தது, உங்களின் இலக்குகளும் அவ்வாறானவையே. அதனால், அனைவருக்கும் பொருத்தமான ஒரே திட்டம் போதுமானதாக இருக்காது. உங்களின் முன்னேற்றத்துக்கு வலுவூட்டக்கூடிய நெகிழ்ச்சியான நிதித் திட்டமொன்றை நீங்கள் கொண்டிருக்க வேண்டும்.

இந்த சிந்தனையை அடிப்படையாகக் கொண்டதாக Union FlexLife உருவாக்கப்பட்டுள்ளது. உங்கள் வாழ்க்கையை, உங்களுக்கேற்ற வகையில் திட்டமிடுவதற்கான சுதந்திரத்தை இது வழங்குவதுடன் – ஒவ்வொரு கட்டத்திலும் உங்களின் தேவைகளை நிவர்த்தி செய்யக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஏனெனில் உங்களின் முன்னேற்றம் என்பது, உங்களின் வழிமுறையில் அமைந்திருக்க வேண்டும்.

## ஒரு நெகிழ்ச்சியான தீர்வில், உங்கள் எதிர்காலத்தை பாதுகாத்துக் கொள்வதற்கு நீங்கள் கொண்டிருக்க வேண்டியது

உங்களின் வியாபித்துச் செல்லும் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்ட, Union FlexLife நிதிசார் நலனின் ஐந்து அத்தியாவசிய அம்சங்களை கொண்டுள்ளது. ஓய்வூதியம், பாதுகாப்பு, முதலீடு, கல்வி அல்லது சுகாதாரம் போன்றன அனைத்தும் ஒரு, நெகிழ்ச்சியான திட்டத்தில் இணைத்து, உங்களின் முன்னேற்றப் பயணத்துக்கு வலுச்சேர்க்கின்றன.

### பணிஓய்வு

நிதிசார் சுதந்திரம், பாதுகாப்பு மற்றும் மனநிம்மதி நிறைந்த பணியிலிருந்து ஓய்வு பெற்ற காலப்பகுதிக்கு உங்களை தயார்ப்படுத்திக் கொள்ள Union FlexLife உதவும்.

### பாதுகாப்பு

வாழ்வின் கடினமான தருணங்களிலும், உங்களின் நிதியத்தின் வளர்ச்சியை பேணி, உங்களையும், உங்களின் அன்புக்குரியவர்களையும் நிதிசார் ரீதியில் பாதுகாப்பாக பேண உதவும்.

### முதலீடு

நீங்கள் கஷ்டப்பட்டு உழைத்த பணத்தை போட்டிகரமான பங்கிலாபங்கள் மற்றும் கவர்ச்சிகரமான லோயல்டி போனஸ் கொடுப்பனவுகளுடன் மேம்படுத்தி, உங்களின் கனவுகளை நனவாக்கிக் கொள்ளுங்கள்.

### கல்வி

வாழ்க்கையில் என்ன நேர்ந்தாலும், உங்கள் பிள்ளையின் கல்விக் கனவுகளை நிதிசார் பாதுகாப்புடன் பாதுகாத்து ஆதரவளியுங்கள்.

### தேகாரோக்கியம்

Union FlexLife உடன், அவசர மருத்துவ நிலையின் போது, நீங்கள் தனித்திருப்பதில்லை. நிதிசார் சுமையை தணிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், நீங்களும், உங்களின் அன்புக்குரியவர்களும் அவசியமான பராமரிப்பை பெற்றுக் கொள்வதை உறுதி செய்யும் வகையில் அமைந்துள்ளது.

# UNION FLEXLIFE ஐ ஏன் தெரிவு செய்ய வேண்டும்?



### குறுகிய கால கட்டுப்பண கொடுப்பனவுகள், நீண்ட கால பாதுகாப்பு

Union FlexLife, உடன் முதல் 5, 7 அல்லது 10 வருடங்களுக்கு மாத்திரம் கட்டுப்பணம் செலுத்தினால் போதுமானதாக அமைந்திருக்கும் என்பதால், நீண்ட கால நிதிசார் அழுத்தங்களின்றி எதிர்காலத்தை திட்டமிடுவதற்கான சுதந்திரம் உங்களுக்கு வழங்கப்படுகிறது. அதற்கு பதிலாக, 40 வருடங்கள் வரை நிலைத்திருக்கும் ஒப்பற்ற, பரிபூரண பாதுகாப்பை நீங்கள் பெறுவீர்கள்.



### முதிர்வு அனுகூலத்தை பெறும் முறையை நீங்களே தெரிவு செய்யுங்கள்

முதிர்வின் பின்னரான கொடுப்பனவை எவ்வாறு பெறுவது என்பதை நீங்களே சுதந்திரமாக தீர்மானியுங்கள். ரொக்கத் தொகை கொடுப்பனவு தெரிவினூடாக முழுத் தொகையையும் ஒரே தடவையில் பெற்றுக் கொள்ளலாம் அல்லது மாதாந்த கொடுப்பனவு தெரிவினூடாக, அனுகூலம் பெறும் காலப்பகுதி வரை, ஒவ்வொரு மாதமும் உத்தரவாதமளிக்கப்பட்ட தொகையை பெற்றுக் கொள்ளலாம்.



### முதிர்வின் போது கவர்ச்சிகரமான லோயல்டி போனஸ்

உங்களின் முதிர்வு மீளப்பெறும் தெரிவு எதுவாக இருந்தாலும், உங்களின் அர்ப்பணிப்புக்கு Union FlexLife வெகுமதியளிக்கும். கட்டுப்பணம் அனைத்தும் முழுமையாக செலுத்தப்பட்டிருந்தால், காப்புறுதி தவணையின் நிறைவில் உங்களின் முதலீட்டு கணக்கில் லோயல்டி போனஸ் சேர்க்கப்பட்டு, உங்களின் முதலீட்டில் உயர் வருமதியை பெற்றுக் கொள்வதை உறுதி செய்யும்.



### முதிர்வு அனுகூலத்தை எவ்வளவு காலத்துக்கு பெறுவது என்பதை தெரிவு செய்யுங்கள்

Union FlexLife மாதாந்த தெரிவுடன், உங்களின் அனுகூலத்தை எந்தளவு காலப்பகுதிக்கு பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதை நீங்கள் தெரிவு செய்யலாம். 10, 15 அல்லது 20 வருடங்கள் வரை தெரிவு செய்து, நீங்கள் தெரிவு செய்த காலப்பகுதி வரை நிலையான மாதாந்த வருமானத்தை அனுபவியுங்கள்.

---

### உங்களுக்குத் தெரியுமா?

Union FlexLife இனால் உங்களின் முதலீட்டு கணக்கில் மேலதிக பணச் சேர்ப்புக்கான (Top-Up) தெரிவு வழங்கப்படும். அதாவது, உங்களுக்கு மேலதிகமாக பணம் கிடைக்கும் போது, அதனை Union FlexLife இல் முதலீடு செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும். காப்புறுதி ஆண்டொன்றில் ஆகக்குறைந்த மேலதிக பண சேர்ப்பு கட்டுப்பணத் தொகையாக ரூ. 25,000 உடன், இரு தடவைகள் வரை நீங்கள் மேலதிக பண சேர்ப்பை மேற்கொள்ளலாம்.

---

**மேலதிக குறிப்புகள்:**

- காப்புறுதி இடைநிறுத்தப்படும் வயதைப் பொறுத்து, 7 வருட கால கட்டுப்பண செலுத்தும் தவணைக்காக ஆகக்குறைந்தது 15 வருடங்கள் காப்புறுதி தவணையும், 10 வருட கால கட்டுப்பண செலுத்தும் தவணைக்காக 20 வருடங்களும் தேவைப்படும்.
- அடிப்படை Union FlexLife திட்டத்துக்கு மாத்திரம் கட்டுப்பணம் செலுத்தும் தவணையான 5, 7 அல்லது 10 வருடங்கள் பொருந்தும். தெரிவுக்குரிய மேலதிக காப்பீடுகள் தெரிவு செய்யப்பட்டிருந்தால், அவற்றுக்கான கட்டுப்பணங்கள் முழு காப்புறுதி தவணை காலப்பகுதியில் அல்லது தெரிவு செய்யப்பட்ட கட்டுப்பணம் செலுத்தும் காலப்பகுதி வரையில் செலுத்தப்பட வேண்டும்.
- முதிர்வின் போது செலுத்தப்பட வேண்டிய லோயல்டி போனஸ் பெறுமதி, தெரிவு செய்யப்பட்ட காப்புறுதி தவணை மற்றும் காப்புறுதி காலப்பகுதியில் சகல கட்டுப்பணங்களும் தவறாமல் செலுத்தப்பட்டிருப்பதை பொறுத்து தீர்மானிக்கப்படும்.
- தெரிவுக்குரிய அனுகூல செலுத்தல் தெரிவு, ரொக்கத் தொகை அல்லது மாதாந்தம் என்பது காப்புறுதி ஆரம்பத்தின் போது தெரிவு செய்யப்பட வேண்டும்.

# UNION FLEXLIFE ஐ ஏன் தெரிவு செய்ய வேண்டும்?



### உங்களுக்கு அவசியமான போது விரும்பிய வகையில் பணியிலிருந்து ஓய்வு பெறுங்கள்

உத்தரவாதமளிக்கப்பட்ட மாதாந்த வருமானத்துடன் உங்களின் சொந்த நியதியில் சுதந்திரமான பணியிலிருந்து ஓய்வு பெறுங்கள்.

Union FlexLife, உடன் நிரந்தர ஓய்வூதியம் பெறும் வயதுடன் நீங்கள் பிணைக்கப்படவில்லை – உங்கள் வாழ்க்கை முறைக்கு பொருத்தமான வகையில் 28 முதல் 70 வரையான எந்தவொரு வயதையும் தெரிவு செய்யுங்கள்.



### வாழ்வின் எதிர்பாராத சவால்களின் போதும், உறுதியளிக்கப்பட்ட அனுகூலங்கள்

ஆயுள் காப்புறுதிதாரர் உயிரிழக்கும்பட்சத்தில், அன்புக்குரியவர்களுக்கு உயிரிழப்பு அனுகூலம் செலுத்தப்படுவதுடன், கட்டுப்பண விலக்கழிப்பு செயற்படுத்தப்பட்டு, எஞ்சியிருக்கும் கட்டுப்பணங்கள் நீக்கப்பட்டு, நிதியம் தொடர்ந்தும் வளர்ச்சியடைவதை உறுதி செய்யும்.

கட்டுப்பணம் செலுத்தும் காலப்பகுதியில் காப்புறுதிதாரர் முழுமையான மற்றும் நிரந்தர அங்கவீனத்தை எதிர்கொண்டால் கட்டுப்பண விலக்கழிப்பு செயற்படுத்தப்பட்டு, நிதியத்தின் தடங்கலில்லாத வளர்ச்சி வழங்கப்படும்.



### தெரிவுக்குரிய மேலதிக காப்பீடுகளுடன் உங்கள் பாதுகாப்பை மேம்படுத்துங்கள்

Union FlexLife உடன். உங்கள் வாழ்க்கைமுறை மற்றும் முன்னுரிமைகளுக்கேற்ற திட்டமொன்றை வடிவமைக்கும் சுதந்திரம் வழங்கப்படுகிறது. வைத்தியசாலை அனுமதி, வருமான இழப்பு, அங்கவீனம் மற்றும் மேலதிக உயிரிழப்பு போன்ற தெரிவுக்குரிய இதர மேலதிக காப்பீடுகளுடன் உங்களின் பாதுகாப்பை நீங்கள் மேம்படுத்திக் கொள்ளலாம். அதனூடாக உங்களுக்கும், உங்களின் அன்புக்குரியவர்களுக்கும் அவசியமான போது பரிபூரண நிதிசார் பாதுகாப்பு வழங்கப்படும்.



### உங்கள் தெரிவுக்குரிய கட்டுப்பணம் செலுத்தும் காலப்பகுதியை தெரிவு செய்யவும்

ருழைெ குடநஒடுகைந இடமிருந்து உங்களின் அர்ப்பணிப்புகளுக்கேற்ப கட்டுப்பணம் செலுத்தும் முறையை தெரிவு செய்யும் சுதந்திரம் மற்றும் நெகிழ்ச்சித்தன்மை வழங்கப்படுகிறது. மாதாந்தம், காலாண்டு, அரையாண்டு அல்லது வருடாந்தம் எனும் தெரிவுகளிலிருந்து உங்களுக்கான கட்டுப்பணம் செலுத்தும் தெரிவுகளை மேற்கொள்ளலாம்.

---

### உங்களுக்குத் தெரியுமா?

நிதிசார் அவசர நிலையின் போது, காப்புறுதி 10 வருடங்களை பூர்த்தி செய்திருக்கும் நிலையில், Union FlexLife இன் முதலீட்டு கணக்கிலிருந்து பகுதியளவு பண மீளப்பெறல்களுக்கு அனுமதியளிக்கப்படும்.

உங்கள் முதலீட்டு கணக்கிலிருந்து ஆகக்குறைந்தது ரூ. 25000 என, மொத்தப் பெறுமதியின் 25மு வரை மீளப் பெற முடியும்.

# உங்களை பிரதிபலிக்கும் திட்டமொன்றை வடிவமையுங்கள்



உங்கள் வாழ்க்கைக்கு பொருத்தமான வகையில் ருளைழெ குடநஒடுகைந திட்டத்தை மாற்றியமையுங்கள்.

உறுதியான உள்வைக்கப்பட்ட பாதுகாப்பை கொண்டுள்ள Union FlexLife, மேலதிக காப்பீடுகளுடன் உங்களின் பாதுகாப்பை மேம்படுத்திக் கொள்வதற்கான தெரிவையும் வழங்குகிறது.

Union FlexLife உடன் நீங்கள் ஒரு ஆயுள் காப்புறுதித் திட்டத்தை தெரிவு செய்வது மாத்திரமன்றி, 40 வருடங்கள் வரை மன நிம்மதி மற்றும் நிதிசார் பாதுகாப்பை அனுபவிக்கும் பாதுகாப்பு வலையை உங்களுக்கும், உங்களின் அன்புக்குரியவர்களும் உருவாக்குகின்றீர்கள்.

## உள்வைக்கப்பட்ட *பாதுகாப்பு

### உயிரிழப்பு காப்பீடு

காப்புறுதி காலப்பகுதியில், எதிர்பாராத நிலையில் உங்களின் உயிரிழப்பின் போது உங்களின் அன்புக்குரியவர்களுக்கு நிதிசார் பாதுகாப்பை வழங்குகிறது.

### உயிரிழப்பின் போது கட்டுப்பண விலக்கழிப்பு

கட்டுப்பணம் செலுத்தும் காலப்பகுதியில் எதிர்பாராத விதமாக உயிரிழந்தால், எஞ்சியிருக்கும் கட்டுப்பணத்தை யூனியன் அஷ்யூரன்ஸ் விலக்கழிப்பு செய்து, உங்களின் அன்புக்குரியவர்களுக்காக நீங்கள் நிறுவிய நிதியம் தொடர்ந்தும் வளர்ச்சியடைவதை உறுதி செய்யும்.

### முழுமையான நிரந்தர அங்கவீனத்தின் போது கட்டுப்பண விலக்கழிப்பு

கட்டுப்பணம் செலுத்தும் காலப்பகுதியில் நீங்கள் முழுமையான மற்றும் நிரந்தர அங்கவீனத்துக்கு ஆளானால், எஞ்சியிருக்கும் கட்டுப்பணங்களை யூனியன் அஷ்யூரன்ஸ் விலக்கழித்து, உங்கள் நிதியம் தடங்கல்களின்றி வளர்ச்சியடைவதை உறுதி செய்யும்.

* குறிப்பு: அனைத்து உள்ளமைக்கப்பட்ட பாதுகாப்பு காப்பீடுகளுக்கும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரீமியம் செலுத்தும் காலத்தில் மட்டுமே பிரீமியங்கள் செலுத்தப்பட வேண்டும்.

## தெரிவுக்குரிய மேலதிக காப்பீடுகள்

### வைத்தியசாலை அனுமதி காப்பீடுகள்

உரிய காலத்தில் சிகிச்சை பெறுவதை உறுதி செய்வதற்காக நிதிசார் உதவி.

### வருமான இழப்பு காப்பீடுகள்

தங்கியிருப்போருக்கு தொடர்ச்சியான நிதிசார் ஆதரவை உறுதி செய்யும்.

### மேலதிக உயிரிழப்பு காப்பீடுகள்

ஆயுள் காப்புறுதிதாரரின் உயிரிழப்பை தொடர்ந்து மேலதிக நிதிசார் பாதுகாப்பு.

### அங்கவீன காப்பீடுகள்

முழுமையான அல்லது பகுதியளவு அங்கவீனத்தின் போது நிதிசார் உதவியை வழங்கும்

**மேலதிக குறிப்புகள்:**

- கட்டுப்பணம் செலுத்தும் காலப்பகுதியில் ஆயுள் காப்புறுதிதாரர் இயற்கையாக அல்லது விபத்தினால் உயிரிழந்தால், உயிரிழப்பின் போது கட்டுப்பணம் விலக்கழிப்பு செயற்படுத்தப்பட்டு – அடிப்படை உயிரிழப்பு காப்பீட்டுக்காக எஞ்சியிருக்கும் கட்டுப்பணங்கள் விலக்கழிக்கப்படும்.
- முழுமையான நிரந்தர அங்கவீனத்தின் போது கட்டுப்பண விலக்கழிப்பு செயற்படுத்தப்பட்டதை தொடர்ந்து, அடிப்படை உயிரிழப்பு காப்பீட்டின் மீதான எதிர்கால கட்டுப்பணங்கள் மற்றும் விபத்துசார் உயிரிழப்பு மற்றும் நீடிக்கப்பட்ட அங்கவீன காப்பீடுகள் போன்றன தவிர்ந்த மட்டுப்படுத்தப்பட்டளவு கொடுப்பனவுகளுடனான தெரிவுக்குரிய மேலதிக காப்பீடுகளின் கட்டுப்பணங்கள் விலக்கழிக்கப்படும்.

# எமது போட்டிகரமான பங்கிலாப வீதங்களுடன் உங்களின் முதலீட்டை மேம்படுத்துங்கள்

நீங்கள் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு ருெழைெ குடநஒடுகைந திட்டத்துக்கும், தனிநபர், பிரத்தியேகமான முதலீட்டு கணக்கு உருவாக்கப்பட்டு பேணப்படும்.

உங்களின் காப்புறுதி காலப்பகுதியில் இந்தக் கணக்கு நீங்கள் முதலீடு செய்யும் கட்டுப்பணங்களினூடாக மற்றும் யூனியன் அஷ்யூரன்ஸினால் பிரகடனம் செய்யப்படும் பங்கிலாப வீதங்களினூடாக மாதாந்தம் வளர்ச்சியடையும்.

| வருடம் | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 | 2025 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆண்டுக்காக உத்தரவாதமளிக்கப்பட்ட ஆகக்குறைந்த பங்கிலாப வீதம் | 8.00% | 10.00% | 10.00% | 10.00% | 9.00% | 8.00% | 9.00% | 9.00% | 10.00% | 9.00% |
| பிரகடனம் செய்யப்பட்ட பங்கிலாப வீதம் | 10.50% | 10.25% | 10.00% | 10.00% | 9.00% | 8.00% | 10.00% | 13.50% | 12.00% | 11.00% |

**மேலதிக குறிப்பு:**

- ஒவ்வொரு ஆண்டின் முற்பகுதியிலும், உத்தரவாதமளிக்கப்படும் ஆகக்குறைந்த பங்கிலாபம் அறிவிக்கப்பட்டு மாதாந்தம் தனிநபர்களின் நிதியத்தில் வருடம் முழுவதிலும் வைப்புச் செய்யப்படும். ஒவ்வொரு ஆண்டின் நிறைவிலும் வைப்புச் செய்யப்பட வேண்டிய பங்கிலாப வீதம் தீர்மானிக்கப்படும். குறித்த ஆண்டில் ஒட்டு மொத்த ஆயுள் நிதியத்தின் பெறுபேற்றைப் பொறுத்து இந்த வீதம் தீர்மானிக்கப்படும். எவ்வாறாயினும், வருடத்தின் ஆரம்பத்தில் பிரகடனம் செய்யப்படும் ஆகக்குறைந்த பங்கிலாப வீதம் என்பது, வருட இறுதியில் பிரகடனம் செய்யப்படும் பங்கிலாப பெறுமதிக்கு நிகரானதாக அல்லது அதனை விட குறைவானதாக அமைந்திருக்கும்.
- யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனம் முன்னர் உத்தரவாதம் அளித்த மற்றும் அறிவித்த ஈவுத்தொகை விகிதங்கள் பற்றிய விவரங்களுக்கு, தயவுசெய்து ஞசு குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது unionassurance.com/tamil/dividend-returns ஐப் பார்வையிடவும்.

எங்கள் கடந்தகால ஈவுத்தொகை விகிதங்களைக் காண ஸ்கேன் செய்யவும்.

## தகைமை விதிமுறை

**பிரவேசிக்கையில் ஆகக்குறைந்த வயது**
18 வருடங்கள்
(அண்மித்த பிறந்த தினம்)

**பிரவேசிக்கையில் ஆகக்கூடிய வயது**
60 வருடங்கள்
(அண்மித்த பிறந்த தினம்)

**காப்புறுதி முடிவுக்கு வரும் வயது**
70 வருடங்கள்
(சரியாக)

**காப்புறுதி தவணை**
10 – 40 வருடங்கள்

**கட்டுப்பணம் செலுத்தும் தவணை**
5 வருடங்கள் | 7 வருடங்கள் | 10 வருடங்கள்

**கட்டுப்பணம் செலுத்தும் முறைகள்**
மாதாந்தம் | காலாண்டு | அரையாண்டு | வருடாந்தம்

**மேலதிக குறிப்புகள்:**

- மேலதிக தெரிவுக்குரிய காப்பீடுகளுக்கான காப்பீட்டு காலம் 10 முதல் 30 வருடங்களுக்குட்பட்டது.
- காப்புறுதி இடைநிறுத்தப்படும் வயதைப் பொறுத்து, 7 வருட கால கட்டுப்பண செலுத்தும் தவணைக்காக ஆகக்குறைந்தது 15 வருடங்கள் காப்புறுதி தவணையும், 10 வருட கால கட்டுப்பண செலுத்தும் தவணைக்காக 20 வருடங்களும் தேவைப்படும்.

# உங்களின் UNION FLEXLIFE எவ்வாறு செயற்படும்

## ஆயுள் காப்புறுதிதாரர் காப்புறுதி தவணையை பூர்த்தி செய்திருக்கும்பட்சத்தில்



அமல், 35 வயதுடைய, விவாகமான நபர் ருஜைழெ குடநஒடுகைந திட்டத்தை 20 வருட தவணைக் காலம் மற்றும் 7 வருட கட்டுப்பணம் செலுத்தும் காலத்துடன் கொள்வனவு செய்கிறார்.

| | |
|---|---|
| காப்புறுதி தவணை: 20 வருடங்கள் | உயிரிழப்பு காப்பீடு: ரூ. 900,000 |
| கட்டுப்பணம் செலுத்தும் தவணை: 7 வருடங்கள் | வருடாந்த கட்டுப்பணம்: ரூ. 137,522 |

கீழே தரப்பட்டுள்ள அட்டவணைகளினூடாக காப்புறுதி தவணை நிறைவில், அவர் எதிர்பார்க்கக்கூடிய அனுகூல பெறுமதிகள் குறிப்பிட்ட பங்கிலாப வீதங்களுக்கமைய விவரிக்கின்றன.

அமல் தமது முதிர்வு அனுகூலத்தை ரொக்கத் தொகையாக பெற்றுக் கொள்ள தீர்மானித்தால்:

| வயது | காப்புறுதி தவணை | உயிரிழப்பு காப்பீடு (ரூ.) | வருடாந்த கட்டுப்பணம் (ரூ.) | விவரிக்கப்பட்ட முதிர்வு பெறுமதி (ரூ.) (லோயல்டி போனஸ் அடங்கலாக) | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | 8% | 10% | 12% |
| 35 | 20 | 900,000 | 137,522 | 2,444,000 | 3,298,000 | 4,446,000 |

அமல் தமது முதிர்வு அனுகூலத்தை மாதாந்த கொடுப்பனவாக பெற தீர்மானித்தால்:

| வயது | காப்புறுதி தவணை | உயிரிழப்பு காப்பீடு (ரூ.) | வருடாந்த கட்டுப்பணம் (ரூ.) | மொத்த ஊதியம் (ரூ.) | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | 8% | 10% | 12% |
| 35 | 20 | 900,000 | 137,522 | 3,440,000 | 5,147,000 | 7,701,000 |

**மேலதிக குறிப்புகள்:**

- குறிப்பிட்ட பங்கிலாப வீதங்களுக்கடைய மதிப்பிடப்பட்ட திரண்ட நிதியங்களின் அடிப்படையில், விவரிக்கப்பட்ட முதிர்வுப் பெறுமதிகள் அமைந்திருப்பதுடன், எதிர்பார்க்கக்கூடிய முதிர்வு அனுகூலங்கள் தொடர்பான கருதுகோளை வழங்கும் வகையில் அமைந்துள்ளது.
- காப்பீடு ஆரம்பிக்கும் போதுள்ள வயது மற்றும் யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தினால் பிரகடனம் செய்யப்பட்ட பங்கிலாபங்கள் போன்றவற்றின் அடிப்படையில் விவரிக்கப்பட்ட பெறுமதிகள் மாறுபடலாம்.

## கட்டுப்பணம் செலுத்தும் தவணையின் பின்னர் ஆயுள் காப்புறுதிதாரர் உயிரிழந்தால்




அமல், 35 வயதுடைய, விவாகமான நபர் Union FlexLife திட்டத்தை 20 வருட தவணைக் காலம் மற்றும் 7 வருட கட்டுப்பணம் செலுத்தும் காலத்துடன் கொள்வனவு செய்கிறார்.யுவ வாந ைஉெநிவைழெ ழக வாந ிழடைஉலஇ ாந ழிவள கழச ய டரஅி ளரஅ அயவரசவைல டிநநெகவைஇ றாநசந வாந கரடட அயவரசவைல யஅழரவெ றடைட டிந ியனை யள ய ழநெ-வைஅந ியலஅநவெ.

காப்புறுதி ஆரம்பிக்கையில், அவர் ரொக்கப் பண முதிர்வு அனுகூலத்தை தெரிவு செய்ததுடன், முழு முதிர்வு பெறுமதியும் ஒரு தடவை கொடுப்பனவாக மேற்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| காப்புறுதி தவணை: 20 வருடங்கள் | உயிரிழப்பு காப்பீடு: ரூ. 900,000 |
| கட்டுப்பணம் செலுத்தும தவணை: 7 வருடங்கள் | வருடாந்த கட்டுப்பணம்: ரூ. 137,522 |
| தெரிவுக்குரிய முதிர்வு அனுகூல மீளப்பெறல்: ரொக்கப் பணமாக | |

எதிர்பாராத தருணத்தில் அமல் உயிரிழந்தால், அவரின் அன்புக்குரியவர்களுக்கு காப்புறுதி தவணை நிறைவில் காப்புறுதி முதிர்வு அனுகூலம் வழங்கப்பட்டு நிதிசார் பாதுகாப்பு வழங்கப்படுகிறது என்பதை கீழே விளக்கமளிக்கப்பட்டுள்ளது.




**மேலதிக குறிப்புகள்:**

- நிதியத்தை விளக்கமளிக்கும் நோக்கில் மாத்திரம், காப்புறுதி தவணை முழுவதிலும் யூனியன் அஷ்யூரன்ஸ் 10மூ பங்கிலாப வீதத்தை பிரகடனம் செய்துள்ளதாக கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது என்பதை தயவு செய்து கவனிக்கவும். அசல் பெறுமதிகள் காப்புறுதி ஆரம்பிக்கையிலுள்ள வயது மற்றும் யூனியன் அஷ்யூரன்ஸ் பிரகடனம் செய்யும் அசல் பங்கிலாபங்களுக்கேற்ப அசல் பெறுமதிகள் வேறுபடும்.
- வழங்கப்பட்டுள்ள கட்டுப்பண பெறுமதிகள் அடிப்படை Union FlexLife காப்புறுதிக்கு மட்டும் என்பதுடன், மேலதிக தெரிவுக்குரிய காப்பீடுகள் தவிர்க்கப்பட்டுள்ளன. தெரிவுக்குரிய மேலதிக காப்பீடுகளைக் கொண்ட காப்புறுதிகளுக்கான கட்டுப்பணங்கள் வேறுபடலாம்.

# கட்டுப்பணம் செலுத்தும் காலப்பகுதியில் ஆயுள் காப்புறுதிதாரர் முழுமையான மற்றும் நிரந்தர அங்கவீனத்துக்கு ஆளானால




அமல், 35 வயதுடைய, விவாகமான நபர் Union FlexLife திட்டத்தை 20 வருட தவணைக் காலம் மற்றும் 7 வருட கட்டுப்பணம் செலுத்தும் காலத்துடன் கொள்வனவு செய்கிறார்.

காப்புறுதி ஆரம்பிக்கையில், அவர் மாதாந்த அடிப்படையில் முதிர்வு அனுகூலத்தை பெற தெரிவு செய்ததுடன், 10 வருடங்களுக்கு மாதாந்தம் - தமக்கும் தமது வாழ்க்கைத்துணைக்கும் நிதியளவில் பாதுகாக்கப்பட்ட ஓய்வூதியத்தை பெற்றுக் கொள்ளும் நோக்கில் இந்தக் கட்டணத்தை பெற தீர்மானித்தார்

| | |
|---|---|
| காப்புறுதி தவணை: 20 வருடங்கள் | உயிரிழப்பு காப்பீடு: ரூ. 900,000 |
| கட்டுப்பணம் செலுத்தும் தவணை: 7 வருடங்கள் | வருடாந்த கட்டுப்பணம்: ரூ. 137,522 |
| தெரிவுக்குரிய முதிர்வு அனுகூல மீளப்பெறல்: மாதாந்த அடிப்படையில் | அனுகூலம் பெறும் காலப்பகுதி: 10 வருடங்கள் |

சவால்கள் நிறைந்த காலத்திலும் நிதியம் எவ்வாறு தொடர்ந்தும் வளர்ச்சியடைந்து, அமலுக்கும் அவரின் அன்புக்குரியவர்களுக்கும் நிதிசார் பாதுகாப்புடனான ஓய்வூதிய காலத்தை வழங்குவதைப் பற்றி இங்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.




**மேலதிக குறிப்புகள்:**

- நிதியத்தை விளக்கமளிக்கும் நோக்கில் மாத்திரம், காப்புறுதி தவணை முழுவதிலும் யூனியன் அஷ்யூரன்ஸ் 10% பங்கிலாப வீதத்தை பிரகடனம் செய்துள்ளதாக கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது என்பதை தயவு செய்து கவனிக்கவும். அசல் பெறுமதிகள் காப்புறுதி ஆரம்பிக்கையிலுள்ள வயது மற்றும் யூனியன் அஷ்யூரன்ஸ் பிரகடனம் செய்யும் அசல் பங்கிலாபங்களுக்கேற்ப அசல் பெறுமதிகள் வேறுபடும்.
- வழங்கப்பட்டுள்ள கட்டுப்பண பெறுமதிகள் அடிப்படை Union FlexLife காப்புறுதிக்கு மட்டும் என்பதுடன், மேலதிக தெரிவுக்குரிய காப்பீடுகள் தவிர்க்கப்பட்டுள்ளன. தெரிவுக்குரிய மேலதிக காப்பீடுகளைக் கொண்ட காப்புறுதிகளுக்கான கட்டுப்பணங்கள் வேறுபடலாம்.

# தெரிவுக்குரிய மேலதிக காப்பீடுகள

1. கட்டுப்பணம் செலுத்தும் தவணை முடிவு வரை கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டிய தெரிவுக்குரிய மேலதிக காப்பீடுகள்

### அங்கவீன காப்பீடுகள்

முழுமையான அல்லது பகுதியளவு அங்கவீனத்தின் போது நிதிசார் பாதுகாப்பை வழங்கும் வகையில் இந்த அங்கவீன காப்பீடுகள் அமைந்துள்ளன.

| | |
|---|---|
| விபத்து காரணமாக மாத்திரம் ஏற்படும் மட்டுப்படுத்தப்பட்டளவு கொடுப்பனவுடனான பரிபூரண மற்றும் நிரந்தர அங்கவீனம் | காப்புறுதி தவணை காலப்பகுதியில் விபத்து காரணமாக ஏற்படும் முழுமையான நிரந்தர அங்கவீனங்களுக்காக 5 சம தவணைகளில் காப்பீட்டுத் தொகை செலுத்தப்படும். |
| நீடித்த பகுதியளவு அங்கவீனம் மட்டுத்தப்பட்ட கொடுப்பனவு | காப்புறுதி தவணை காலப்பகுதியில் விபத்து காரணமாக ஏற்படும் முழுமையான நிரந்தர அங்கவீனங்களுக்காக காப்பீட்டுத் தொகையின் சதவீதத் தொகை செலுத்தப்படும். |

### மேலதிக உயிரிழப்பு காப்பீடுகள்

இந்த மேலதிக உயிரிழிப்பு காப்பீடுகளினூடாக, அடிப்படை காப்பீட்டுக்கு மேலதிகமாக மேலதிக நிதிசார் பாதுகாப்பை வழங்கி, எதிர்பாராதவிதமாக நீங்கள் உயிரிழக்கும் போதிலும், உங்கள் அன்புக்குரியவர்கள் நிதிசார் ரீதியில் ஆதரவளிக்கப்படுவதை உறுதி செய்யும்.

| | |
|---|---|
| மட்டுப்படுத்தப்பட்ட கொடுப்பனவு நிலை தவணை அனுகூலம் | சிறியளவு மேலதிக கட்டுப்பணத் தொகைக்கு, உங்களின் அடிப்படை காப்பீட்டு தொகையை போன்று 20 மடங்கு வரை உங்களின் உயிரிழப்பு காப்பீட்டை மேம்படுத்தலாம். |
| விபத்துசார் உயிரிழப்பு அனுகூலம் மட்டுப்படுத்தப்பட்ட கொடுப்பனவு | விபத்துசார் உயிரிழப்பு நேர்ந்தால், அடிப்படை ஆயுள் காப்பீட்டுக்கு மேலதிகமாக, ரொக்கத் தொகை கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். |
| மட்டுப்படுத்தப்பட்ட கொடுப்பனவு வாழ்க்கைத்துணை பாதுகாப்பு அனுகூலம் | வாழ்க்கைத்துணை எதிர்பாராத விதமான உயிரிழக்கும் போது ரொக்கப்பணத் தொகை செலுத்தப்படும். |
| மட்டுப்படுத்தப்பட்ட கொடுப்பனவு மரணச் சடங்கு செலவு அனுகூலம் | ஆயுள் காப்புறுதிதாரரின் எதிர்பாராத உயிரிழப்பின் போதான மரணச் சடங்கு செலவுகளை ஈடு செய்யும். |

### வருமான இழப்பு காப்பீடுகள்

காப்புறுதிதாரர் எதிர்பாராதவிதமாக உயிரிழக்கும் சந்தர்ப்பத்தில், வருமான இழப்பை ஈடு செய்வதற்கு உதவி, ஆயுள் காப்புறுதிதாரின் அன்புக்குரியவர்களுக்கு நிதிசார் பாதுகாப்பை வழங்கும்.

| | |
|---|---|
| மட்டுப்படுத்தப்பட்ட கொடுப்பனவு குடும்ப வருமான அனுகூலம் | ஆயுள் காப்புறுதிதாரர் எதிர்பாராதவிதமாக உயிரிழந்தால், காப்புறுதி தவணை காலாவதியாகும் வரை, குடும்ப அங்கத்தவர்களின் நிதிசார் சுமையை தணிக்கும் வகையில், காலாண்டு அடிப்படையில் ரொக்கக் கொடுப்பனவுகள் வழங்கப்படும். |

2. **தெரிவுக்குரிய மேலதிக காப்பீடுகள், கட்டுப்பணங்கள் முழு காப்புறுதி தவணைக்கும் செலுத்தப்பட வேண்டியது அல்லது மேலதிக காப்பீட்டு தவணைக்காக செலுத்தப்பட வேண்டியது, இவற்றில் முதலில் எழும் சம்பவத்துக்கானது.**

### வைத்தியசாலை அனுமதி காப்பீடுகள்

இந்த மேலதிக காப்பீடுகளினூடாக, உங்களுக்கு வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதற்கு நேரிட்டால், அவசியமான நிதிசார் உதவி வழங்கப்பட்டு, அவசியமான மருத்துவ சிகிச்சைகள் மற்றும் நிதி உதவிகளை பெற்றுக் கொள்வதை உறுதி செய்யும்.

| | |
|---|---|
| யூனியன் Health 360 | யூனியன் Health 360 என்பது, உங்களின் முழுக் குடும்பத்துக்கான, ஆயுள் காப்புறுதியில் இணைத்துக் கொள்ளக்கூடிய பரந்த சுகாதார காப்புறுதித் தீர்வாக அமைந்துள்ளது. சுகயீனம் அல்லது சத்திரசிகிச்சை போன்றவற்றுக்காக எழும் வைத்தியசாலை செலவுகளை பரந்தளவில் ஈடு செய்வதாக அமைந்துள்ளது. மேம்படுத்தப்பட்ட நிதிப் பாதுகாப்புக்காக, பிரசவம் மற்றும் மூக்குக் கண்ணாடி அனுகூலங்கள் போன்ற மேலதிக காப்பீடுகளை சேர்த்துக் கொள்ளும் தெரிவையும் இது வழங்குகிறது. |
| யூனியன் ஸ்மார்ட் ஹெல்த் ப்ரீமியர் | ஆயுள் காப்புறுதிதாரர், வாழ்க்கைத்துணை, 23 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் மற்றும் ஆயுள் காப்புறுதிதாரரின் பெற்றோருக்கு இலங்கையிலும், வெளிநாடுகளிலும் (ஐக்கிய அமெரிக்கா மற்றும் கனடா தவிர்ந்த) ஏற்படும் மருத்துவ செலவுகளை மீளளிக்கும் வகையிலும், பெருமளவு மேலதிக அனுகூலங்கயையும் கொண்ட தெரிவுக்குரிய மேலதிக காப்பீடாக அமைந்துள்ளது. |
| வைத்தியசாலை பண அனுகூலம் | வைத்தியசாலை அனுமதி காரணமாக ஏற்படும் மேலதிக மருத்துவ செலவுகளை ஈடு செய்யும் வகையில், காப்புறுதி அட்டவணையில் விளக்கமளிக்கப்பட்டுள்ளதற்கமைய, தினசரி காப்பீட்டுத் தொகை செலுத்தப்படும். |
| வைத்தியசாலை பண அனுகூலம் சிறுவர் | ஆயுள் காப்புறுதிதாரரின் பிள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்க நேரிட்டால், காப்புறுதி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காப்பீட்டு பெறுமதிக்கு நிகரான தினசரி அனுகூலம் - வைத்தியசாலையில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் எழும் மேலதிக மருத்துவ செலவுகளை ஈடுசெய்ய உதவும் வகையில் வழங்கப்படும். |
| பரிபூரண சத்திரசிகிச்சை அனுகூலம் | இந்த மேலதிக காப்பீட்டினூடாக, விபத்தை தொடர்ந்து அல்லது சுகயீனம் காரணமாக மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சையின் பின்னர் ரொக்கத் தொகை உடனடியாக செலுத்தப்படும். |
| சுவமக அனுகூலம் | இந்த தெரிவுக்குரிய காப்பீட்டினூடாக, பாரதூரமான நோய் நிலையின் போது, நிதிசார் உதவியை பெற்றுக் கொடுக்கும் வகையில், ஆயுள் காப்புறுதிதாரருக்கு ரொக்கத் தொகை வழங்கப்படும். |
| சிறுவர் தேகாரோக்கிய அனுகூலம் | இந்த தெரிவுக்குரிய காப்பீட்டினூடாக பிள்ளைகளுக்கு தினசரி பண அனுகூலங்கள் மற்றும் மேற்கொள்ளப்படும் 244 வகையான சத்திர சிகிச்சைகளுக்காக காப்பீடுகள் வழங்கப்படும். |

### அங்கவீன காப்பீடுகள்

முழுமையான அல்லது பகுதியளவு அங்கவீனத்தின் போது இந்த அங்கவீன காப்பீடுகளினூடாக நிதிசார் பாதுகாப்பு வழங்கப்படும்.

| | |
|---|---|
| விபத்து அல்லது சுகயீனம் காரணமாக பரிபூரண மற்றும் நிரந்தர அங்கவீனம் | காப்புறுதி தவணை காலப்பகுதியில் விபத்து அல்லது சுகயீனம் காரணமாக ஏற்படும் முழுமையான நிரந்தர அங்கவீனங்களுக்காக 5 சம தவணைகளில் காப்பீட்டுத் தொகை செலுத்தப்படும். |

**மேலதிக குறிப்புகள்:**

- ஆயுள் காப்புறுதித் திட்டத்தினால் காப்பீடு செய்யப்பட்டுள்ள பாரதூரமான நோய் நிலைகள் தொடர்பான முழுமையான விபரங்கள் மற்றும் வரைவிலக்கணங்களுக்கு காப்புறுதி ஆவணத்தைப் பார்க்கவும்.
- இந்த கையேடு, தகவல் வழங்கும் நோக்கத்துக்கானது மட்டுமே. இது ஒரு காப்புறுதி ஒப்பந்த ஆவணமல்ல.

**அனுகூலங்கள், தவிர்ப்புகள் அல்லது நியதிகள் மற்றும் நிபந்தனைகள் பற்றிய மேலதிக தகவல்களுக்கு, விற்பனையை பூர்த்தி செய்யும் முன்னர் காப்புறுதி ஆவணத்தை கவனமாகப் பார்க்கவும்.**

யூனியன்
அஷ்யூரன்ஸ்
ஜோன் கீல்ஸ் நிறுவனமாகும்


யூனியன் அஷ்யூரன்ஸ் பிஎல்சி (PQ 12)
இல. 20, சென் மைக்கல்ஸ் வீதி,
கொழும்பு 03, இலங்கை

1330 (24/7 ஹொட்லைன்)
011 2990 990

unionassurance.com
info@unionassurance.com


எம்மை கண்டறியுங்கள்


யூனியன் அஷ்யூரன்ஸ் பிஎல்சி, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவால் (IRCSL) உரிமம் பெற்றுள்ளது.
UA PM 80 T வெளியிடுவோர் யூனியன் அஷ்யூரன்ஸ் பிஎல்சி (PQ 12 ) 05 / 2026